




ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, 156வது வார்டு, முகலிவாக்கத்திற்குட்பட்ட, பாகம் எண் 76ல் பாக நிலை முகவர் (BLA2) ம.வெங்கடேசன் தலைமையில் நடைபெற்ற ”என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரை கூட்டத்தில் மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான தா.மோ.அன்பரசன் கலந்துக்கொண்டு உரையாற்றினார். உடன் பகுதி செயலாளர் ப.குணாளன், வட்டச் செயலாளர் ஜெ. செல்வேந்திரன், கழக நிர்வாகிகள் கீதா ஆனந்தன், கோ.கோட்டீஸ்வரன், பி.திருமாறன், வெங்கடேசன், நெய்வேலி தங்கம், வெ.பிரகாஷ், சாவித்திரி, ராஜேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் சித்தாமூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் சித்தாமூர் ஒன்றிய பெருந்தலைவர் வி.ஏழுமலையின் புதல்வர் ஏ.விஜயகுமார் – ஜி.வி. நிர்மலா – ஸ்ரீ ஆகியோரின் திருமண வரவேற்பு நிகழ்வில் கழக அமைப்பு செயலாளர் முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் எம்.ஆர் கே.பன்னீர்செல்வம், ஆர்.காந்தி மற்றும் மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு மற்றும் ஒன்றிய கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் மாநில, மாவட்ட, ஒன்றிய அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக தோழர்கள் அனைவரும் திரளாக பங்கேற்று சிறப்பித்தனர்.

### மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.59 இலட்சம் மதிப்பிலான

# இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் - உதவி உபகரணங்கள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்!

*சென்னை,டிச.11-*

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நேற்று (10.12.2025) சென்னை, சைதாப்பேட்டை, ஜோன்ஸ் ரோடு, சென்னை பெண்கள் (மாந்தோப்பு) மேல்நிலைபள்ளியில் தென் சென்னை மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் மற்றும் உதவி உபகரணங்கள் வழகும் நிகழ்ச்சி நடைபெற்றது.



இந்நிகழ்ச்சியில், தென் சென்னை மாவட்டத்திற் குட்பட்ட

50 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.50,90,000/- மதிப்பிலான இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள்,

5 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.5,72,000/- மதிப்பிலான மின்கலனால் இயங்கும் சிறப்பு சக்கர நாற்காலிகள், 10 மாற்றுத்திறனாளிகளுக்கு

ரூ.1,44,900/- மதிப்பிலான திறன் பேசிகள் (Smart Phone),

10 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ. 63,590/- மதிப்பிலான மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள் மற்றும்

5 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ. 28,600/- மதிப்பிலான காதுக்கு பின்னால் அணியும் காதொலி கருவிகள் என ஆக மொத்தம்

81 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ. 58,99,090/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை அமைச்சர் மா. சுப்பிரமணி யன் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், சென்னை மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சு. கீதா, மண்டலக்குழுத் தலைவர் (கோடம்பாக்கம்) எம். கிருஷ்ணமூர்த்தி, தென் சென்னை மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சீ.குமார் உட்பட மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், பொது மக்கள் பலர் கலந்து கொண்டனர்.

### நாடு முழுவதும் புதுப்பிக்கத்தக்க

# எரிசக்தி உற்பத்தியைக் கூட்ட - ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் – தருமபுரி ஆ.மணி எம்.பி. கேள்வி!

*புதுடெல்லி,டிச.11-*

தருமபுரி எம்.பி.ஆ.மணி மக்களவையில் கேள்வி வருமாறு:

இந்தியா முழுவதும் 2030 ஆம் ஆண்டுக்குள் 500 GW புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறனை அடைய ஒன்றிய அரசு ஏதேனும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதா? தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மின் உற்பத்தி திறன் கூட்டலின் தற்போதைய நிலை என்ன?

நாடு முழுவதும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களுக்கு (RE) கடன் உறுதிமொழிகளை அதிகரிக்க ஒன்றிய அரசு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுடனும், நிதி நிறுவனங்களுடனும் இணைந்து ஏதேனும் திட்டங்களை வழங்கி உள்ளதா? இருப்பின் அதன் விவரங்கள் என்ன?

பிரதான் மந்திரி சூர்யா கர் முஃப்ட் பிஜிலி யோஜனாவின் கீழ் 7 % வட்டியில் அடமானம் இல்லாத கடன் (PM-SBMGY)

3 KW வரை கூரை சூரிய மின் நிறுவல் உள்ளிட்ட திட்டங்களின் மூலம் தமிழ்நாட்டில் குறிப்பாக தருமபுரி மாவட்டத்தில் உள்ள குடும்பங்கள் பயன் அடைந்துள்ளதா? இருப்பின் அதன் விவரங்கள் என்ன?

தமிழ்நாட்டில் கடந்த 3 ஆண்டுகளில் தருமபுரி மாவட்டம் உட்பட IREDA,REC,PFC மற்றும் பொதுத்துறை வங்கிகள் மூலம் RE கடன்கள் வழங்கப்பட்டுள்ளதா? வழங்கப்பட்டிருந்தால் அதன் எண்ணிக்கை மற்றும் மதிப்பு என்ன? என்று புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் மின்சாரத்துறை இணையமைச்சர் ஸ்ரீபாத் யோசோ நாயக்கிடம் மக்களவையில் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி கேள்வி எழுப்பி உள்ளார்.






சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் வடக்கு பகுதி 34 வது வட்டத்தில் துணை முதல்வர் – கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு வட்ட செயலாளர் கே.வி.இராஜன் தலைமையில் 500 நபர்களுக்கு நலதிட்ட உதவிகள் வழங்கி பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஊடகவியலாளர் வெ.மதிமாறன் சிறப்புறையாற்றினார். மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் தொகுதி பார்வையாளர் கன்னிகை கோ.ஸ்டாலின், பகுதிக் கழக செயலாளர் அ.முருகன், மாவட்ட துணை செயலாளர் எஸ்.ஆர்.கமலக்கண்ணன், எ.தமிழ்செல்வன், வட்ட கழக செயலாளர்கள் என்.கார்த்திபன், சி.எஸ். இரவி, கே.இ.செந்தமிழ், அரசு கி.தினகரன் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள் வட்ட கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பெருந்திரளாக கழக தோழர்கள் பங்கேற்றனர்.

### மா.பா.அன்புதுரை தலைமை! ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி 111 ‘அ’ வட்டத்தில்

# “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” பரப்புரைக் கூட்டம்!

## நே.சிற்றரசு, தயாநிதி மாறன், அன்பகம் கலை, நா. எழிலன், சைதை சாதிக் பங்கேற்பு!

*சென்னை, டிச.11*

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணையின்படி தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் இளம் தலைவர் அவர்களின் ஆலோசனைப்படி பகுதி செயலாளர் மா. பா. அன்புதுரை தலைமையில் 111.அ வட்டத்தில் இன்று (11.12. 2025 வியாழக்கிழமை) மாலை 5 மணி அளவில் 111அ வட்டத்தில் பாகம்:80 29 கீரீம்ஸ் சாலை மற்றும் பாகம்:81 காளியம்மன் கோயில் 1வது தெரு 3வது தெரு ஆகிய பாகங்களில் “தமிழ்நாடு தலைகுனியாது என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” என்ற பரப்புரை நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே. சிற்றரசு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன், ஆயிரம் விளக்கு தொகுதி பார்வையாளர் சைதை சாதிக், மாமன்ற உறுப்பினர் எம்.ஏ. நந்தினி பங்கேற்று சிறப்புரை ஆற்ற உள்ளார்கள்.

இப் பரப்புரை கூட்டத்திற்கு பாகம் 80, 81 பாகத்திற்கு உட்பட்ட மாவட்ட பகுதி வட்டக் கழக நிர்வாகிகள், முன்னாள் இந்நாள் நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், பி.எல்.ஏ. 2, பி.எல்.சி., பி.டி.ஏ. மற்றும் கழக முன்னோடிகள் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வட்டச் செயலாளர் எஃப்.பீட்டர் ஜான் அறிவித்துள்ளார்.

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ. மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்!

# சென்னை தென் மேற்கு மாவட்ட இலக்கிய அணி சார்பில் பாரதியார் பிறந்தநாள் விழா!

## மாவட்ட அமைப்பாளர் விஜய் வெங்கடேசன் அறிக்கை!

*சென்னை, டிச. 11-*

சென்னை தென் மேற்கு மாவட்ட இலக்கிய அணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் விஜய் வெங்கடேசன் ஏற்பாட்டில் மகாகவி சுப்பிரமணிய பாரதி அவர்களின் 144 வது பிறந்த நாள் விழா இன்று (11.12.2025 வியாழக்கிழமை) காலை 9.30 மணி அளவில் மயிலாப்பூர் சிபி ராமசாமி சாலை அலுவலகத்தில் நடைபெறுகிறது. இந்த நிகழ்ச்சியில் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினரும், சென்னை தென் மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு கலந்து கொண்டு பாரதியார் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்துகிறார் .

மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி மதி , மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி முன்னிலை வகிக்கின்றனர்.

123 அ வட்ட செயலாளர் மு ராஜேந்திரன், 123 வது வட்ட செயலாளர் ஏழுமலை , மாவட்ட தலைவர் ச.தேவராசு, துணை தலைவர் மூ . பாலகிருஷ்ணன் , மாவட்ட துணை அமைப்பாளர் அயன் ரமேஷ், இரா. சதாசிவம், mas செந்தில் குமார், சா ரீதர், ஆர் வரதராஜன், எம் ஜி சேகரன். வரவேற்கின்றனர்.

மயிலை மேற்கு, கிழக்கு பகுதி இலக்கிய அணி அமைப்பாளர் க.கணபதி, தட்சிணாமூர்த்தி, தியாகராயர் நகர் மேற்கு , கிழக்கு பகுதி அமைப்பாளர்

யு.ராம்பாபு, பன்னீர்செல்வம் நன்றி கூறுகின்றனர்.

மேலும் வட்ட கழக , பகுதி கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

இவ்வாறு மாவட்ட அமைப்பாளர் விஜய் வெங்கடேசன் அறிக்கை விடுத்துள்ளர்.




திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பபூண்டி தொகுதி, கீழ்முதல்பேடு அரசு தொடக்கப்பள்ளியில் மாணவர்களின் கற்றல் திறன், குடிநீர் வசதி, காலை உணவு திட்டம், சுகாதாரம் ஆசிரியர்களின் கற்பிக்கும்; முறை மற்றும் பள்ளி நிர்வாகம் குறித்து டி.ஜெ. கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. ஆய்வு மேற்கொண்டார். உடன் கே.ஜி.நமச்சிவாயம், கே.ஜி.குமார், நாகு, குகன், இ.பி.சுரேஷ், தலைமை ஆசிரியர் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.






சென்னை வடக்கு மாவட்டம்
ஆர்.கே.நகர் மேற்கு பகுதி இலக்கிய அணி
இளைஞர்களின் எழுச்சி நாயகர், மாண்புமிகு தமிழக துணை முதல்வர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு
பொதுகூட்டம் மற்றும் நலத்திட்ட நிகழ்ச்சி
நாள் : 11.12.2025 மாலை 6.00 மணி இடம் : வைத்திய நாதன் மேம் பாலம் அருகில்
தலைமை
P.T.முருகன்
இலக்கிய அணி மேற்கு பகுதி துணை அமைப்பாளர்
முன்னிலை
S.ஜெபதாஸ்பாண்டியன் B.A.B.L.,
ஆர்.கே.நகர் மேற்கு பகுதி செயலாளர்
ஓலி.ஓளி.ஆ.பாபு மா.இலக்கிய அ.அமைப்பாளர்
பகுதி நிர்வாகிகள் : மாஸ் T.வெங்கடேசன் மு.கோவிந்தராஜ்
M.லோகநாதன் T.திராவிடசெல்வி P.சீனிவாசன்
வரவேற்பு
நேதாஜியு.கணேசன் MC எஸ்.எல்.சுந்தர் கி.தேவன் ஆர்.ராஜன்
ஜி.ஏழுமலை ஆர்.ஏ.எம்.சசிகுமார் ஏ.மணிமேகலை MC
ஆர்.கே.நகர் மேற்கு பகுதி இலக்கிய அணி துணை அமைப்பாளர்கள்
N.சாந்தகுமார் ஸ்டீல்M.குணா G.செல்வராஜ் V.S.K.செல்வம் K.அன்புமணி
சிறப்புரை
தி.செந்தில்வேல்
ஊடகவியலாளர்
நலத்திட்ட உதவிகள் வழங்குபவர்கள்
ஆர்.டி.சேகர் B.Com.,B.L.,MLA
சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர், பெரம்பூர்சட்டமன்றதொகுதி
மருத்துவர் கலாநிதிவீராசாமி MP
மாநில அயலக அணி தலைவர் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர்
ஜே.ஜே.எபினேசர் M.Com.,B.L., MLA
ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர்– அமைப்பாளர். செ.வ.மா.இளைஞர் அணி
வி.பி.கலைராஜன் B.A.B.L., கழக இலக்கியஅணி செ.
இரா.லட்சுமணன் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி செயலாளர்
கே.வி.லோகேஷ் ஆர்.கே.நகர் தொகுதி பொறுப்பாளர்
சிவாஜிகிருஷ்ணமூர்த்தி தலைமை கழக பேச்சாளர்
பி.டி.பாண்டிசெல்வம் வர்த்தக அ.மாநில இ.செயலாளர்
என்.மருதுகணேஷ் கழக.சட்ட து.செயலாளர்
செ.ஜோதி இளம் பேச்சாளர்
ப.ஆ.சண்முகம் கோ.ராதாகிருஷ்ணன் ஏ.கே.பால்சாமி க.சிவகுமார் கே.ரத்தினவேல் பி.ரவிசங்கர் எம்.லோகநாதன் க.ஜெயராஜ்
நன்றியுரை
K.S.தங்கபாலா BA ஆர்.எஸ்.சி.போஸ்
இலக்கிய அணி மேற்கு பகுதி துணை அமைப்பாளர்கள்
நிகழ்ச்சி ஏற்பாடு
O.E.அழகானந்தன்
இலக்கிய அணி மேற்கு பகுதி அமைப்பாளர்
ஆர்.கே.நகர் மேற்கு பகுதி இலக்கிய அணி திமுக